Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழ் நாடக உருவாக்க வரலாற்றில் மனோன்மணீயம்

முனைவர் இரா. ஜானகி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வடபழனி வளாகம்,SRMIST

17

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் நாடகம் என்பது மக்களோடு தொடர்புடைய ஒரு கலைவடிவமாகும். நாடகம் மக்களின் வாழ்வியலோடு கலந்தது. தமிழ் பண்பாட்டு வரலாற்றில் நாடகம் பெரும் பங்கு வகிக்கிறது. தமிழில் நாடகத்தின் வளர்ச்சி நிலையை எழுத்து வகையில் கலித்தொகை, ஆற்றுப்படை மற்றும் சிலம்பு போன்ற நூல்களிலிருந்தும் கூத்து வடிவிலும் வளம் அடைந்திருக்கும் தன்மையை அறிய முடிகின்றது. நாடகம் மக்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்ய உதவும் ஊடகமாக இன்றளவும் செயல்பட்டுவருவதை காணலாம். படிப்பதற்கான நாடகம் மற்றும் நடிப்பதற்கான நாடகம் என்ற இருவகைப்பாடுகளில் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட மனோன்மணீயம் நாடகம் செய்யுள் அமைப்பில் அமைந்த படிப்பதற்கான முதல் நாடகமாக அமையக் காணலாம். இக்கட்டுரையில் தமிழ் நாடக வரலாற்றில் மனோன்மணீயத்தின் தனித்துவமான பண்புகள், நாடகத்தின் அமைப்பும் போக்கும், நாடகத்தின் மாண்புகள் முதலியன ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** மனோன்மணீயம் – உருவாக்கப் பின்புலம் - அமைப்பு – மாண்புகள்

**முன்னுரை**

முத்தமிழில் உணர்வோடு கலந்த கதை தழுவிய பேச்சும் பாட்டும் நாடகம் எனப்படும். நாடகம் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கத்தில் இருந்துள்ளது. ஆற்றுப்படை,சிலப்பதிகாரம் என்னும் நூல்கள் வழியும் அடியார்க்கு நல்லார் உரை வழியும் நாடகம் காலத்திற்கேற்ப வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது. தமிழில் கிடைக்கும் முதல் நாடகம் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப்பிரகசனம் என்பதாகும்.இதனைத் தொடர்ந்து கதை தழுவிய முழுமையான நாடக அமைப்பு சார்ந்து நாடகங்கள் தோன்றியது பிற்காலச் சோழர் காலத்தில்தான். பின் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் நாடகம் மீண்டும் மறுமலர்ச்சி அடைந்தது.இதன் விளைவாக பள்ளு – குறவஞ்சி நாடகங்கள், நொண்டி, கீர்த்தனை வகையிலான நாடகங்கள், புராணம், சமயம் சார்ந்த நாடகங்கள் எனத் தமிழில் நாடகத்தின் வளர்ச்சி விரிவடைந்தது.மேலும் நாடகங்கள் பொதுவாக மக்களோடும் நிர்வாகத்தோடும் தொடர்புடைய படைப்பாகவும் பண்பாட்டு அடையாளமாகவும் கருத்து பரிமாற்ற ஊடகமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அல்லது போராட்ட உணர்வை கலகக்குரலாக பதிவு செய்யும் ஆவணமாகவும் இருந்துள்ளது எனலாம். இவ்வாறான சூழலில் தமிழில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட முதல் கவிதை நாடகம் மனோன்மணீயம் நாடகமாகும். மனோன்மணீயம் நாடக நூலின் உருவாக்க வரலாற்றையும் அவற்றின் மாண்புகள் குறித்தும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை:** (1885 – 1897)

கேரள நாட்டில் ஆலப்புழை என்னும் ஊரில் 1885 இல் பிறந்த சுந்தரம் பிள்ளை அவர்கள் 1888 இல் எழுதிய 'நூற்தொகை விளக்கம்' என்னும் முதல் தமிழ் நூல் வழி பாடலாசிரியராகவும் The Age of Thirugnanasambandha, The Ten Tamil Idylls, திருவிதாங்கூர் மன்னர் கால ஆராய்ச்சி என்னும் பல நூல்கள் வழி சிறந்த இலக்கிய வரலாற்றாளராகவும் கல்வெட்டாய்வாளராகவும் நன்கு அறியப்பட்டவர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை வெளியிட்ட ஒரே புனைவு இலக்கியம் 'மனோன்மணீயம் என்னும் கவிதை நாடகமாகும் .

**மனோன்மணீயமும் சுந்தரனாரும் :**

மனோன்மணீயம் நாடகம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களால் 1891 இல் முதன்முதலாக வெளியிடப்பட்டது. இதனின் மீள் பதிப்பு 1922 இல் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களால் செய்யப்பட்டுள்ளது.மனோன்மணீயத்தின் கதை Edward Balwer Lytton பிரபு எழுதிய The secret Way என்ற ஆங்கில இலக்கியத்தை தழுவியும் இந்நாடகத்தில் இடம்பெற்றுள்ள **சிவகாமி சரிதம்** என்பது Goldsmith எழுதிய The Hermit என்பதை பின்பற்றியும் தமிழ்நாட்டு மரபிற்கு ஏற்ப சிற்சில இடங்களில் சில மாறுதல்களைக் கொண்டு சுந்தரம் பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. சிவகாமி சரிதம் என்பது ஒரு தனி நூல். இந்நூல் சுந்தரம்பிள்ளை அவர்களால் 1889 இல் வெளியிடப்பட்டு பின் அது மனோன்மணீயம் நாடகத்தில் வாணியின் வாயிலாக காதலின் உன்னத இயல்பை மனோன்மணிக்கு எடுத்துரைக்கும் பொருட்டு சொல்லப்படும் கிளைக்கதையாக இணைக்கப்பட்டுள்ளது. மேலும் 19 ஆம் நூற்றாண்டில் சிறப்பானத் தன்மையில் உருவாக்கப்பட்ட கவிதை நாடகமாக நமக்கு கிடைத்தனவாகிய வெனிஸ் வணிகன் (1876), வீல நாடகம் (1894) போன்று மனோன்மணீயம் (1891) நாடகம் விளங்குகின்றது எனலாம். மனோன்மணீயம் தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பை எடுத்தியம்புவதோடு புதிய வகைமையில் உருவாக்கப்பட்ட நவீன நாடகம் என்பதையும் வடமொழி, ஆங்கிலம் முதலான மொழிகளில் காணப்பட்ட உத்திகளை பின்தொடர்ந்த தழுவல் நாடகம் என்பதையும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தம் நூலின் முகவுரையில் எடுத்துக்கூறியுள்ளார்.

> இந்நாடகம் வடமொழி ஆங்கிலேயம் முதலிய பாஷைகளின் உள்ள நாடக வழக்கிற்கிசையச் செய்திருப்பதால்… (மனோன்மணீயம்,1992, ப.23)

மேலும் மனோன்மணீய நாடகம் குறைவுடைய மற்றும் திருப்தியற்ற தன்மையிலேயே தன்னால் சூழல் காரணமாக உருவாக்க முடிந்தது என்பதையும் மறைக்காமல் தம் முகவுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

> பல்வேறு தொழில்களிடையிலும் பிணி கவலையாதிகள் நடுவிலும் ஆங்காங்கு அகப்பட்ட அவகாசங்களிற் செய்யப்பட்டமையால் இந்நாடகத்துட் பல பாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்தி தருவன அல்ல….(மனோன்மணீயம்,1992,ப.23)

மனோன்மணீயம் தழுவல் நாடகமாக இருந்தாலும் முதல் நவீன நாடகப் படைப்பாக திகழ்ந்த காரணத்தால் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை என்று அழைக்கப்பட்டவர் தமிழ் இலக்கிய வரலாற்றில் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை என்று அனைவராலும் அழைக்கும் பேறுபெற்றார். இந்நாடகம் ஆசிரியருக்கு தனி அடையாளத்தை உருவாக்கியது என்பதை பல பேரறிஞர்களின் மொழிவழியும் அறிய முடிகின்றது.

மன்றப் புலவரில் கைக்காரன் - தமிழ்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மனோன்ம ணியம்செய்த சுந்தரன் (உயர்ந்தோர்,தேனருவி-1)

எனத் தமிழ் உணர்ச்சிப்பாவலன் பாவேந்தர் பாரதிதாசனும் ,

"சென்ற நூற்றாண்டில் தமிழுக்குச் சிறப்புச் செய்த சான்றோர் அறுவருள் தலையாயவர் சுந்தரனார்"

என்று பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களால் பெருமைப்படுத்தும் அளவிற்கு உயர்ந்தவர் சுந்தரம்பிள்ளை அவர்கள் எனலாம்.

சோனார் பங்களா என்ற தாகூரின் வங்க தேசிய கீதம் போல் தமிழ் மக்களுக்கு ஓர் ஒப்பற்ற தேசியப் பாடலை அளித்துள்ளார் சுந்தரம் பிள்ளை அவர்கள்.மனோன்மணீயம் நாடக நூலில் பாயிரம் பகுதியில் தமிழ்த்தெய்வ வணக்கம் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள பகுதியே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக முல்லைப்பாணி என்னும் பண்ணில் மெல்லிசை மன்னர் விசுவநாதன் இசையில் இன்றளவும் பாடப்படுகின்றது.

மனோன்மணீயம் நாடக ஆசிரியரை சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஒன்றை திருநெல்வேலியில் தோற்றுவித்துள்ளது. மற்றும் மனோன்மணீயம் நாடகம் மொழிநடையின் அடிப்படையில் படிப்பதற்கேற்ற கவிதை நாடகமாக மட்டும் அமைந்துள்ளதால் அது பல மேடைகளை காணாதபோதும் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் டி.ஆர்.சுந்தரம் இயக்கத்தில் 1942 இல் **மனோன்மணீ** என்ற பெயரில் திரைப்பட வடிவமாக எடுக்கப்பட்டுள்ளது.

**மனோன்மணீயம் அமைப்பும் போக்கும்:**

மனோன்மணீயம் பாயிரம், ஐந்து அங்கங்கள், இருபது களங்கள் என்னும் அமைப்பு முறையில் 4502 அடிகள் அமைய பாடப்பட்டுள்ளது.பாயிரப்பகுதி கடவுள் வணக்கம், தமிழ்த்தெய்வ வணக்கம், அவையஞ்சின நெஞ்சொடு கிளத்தல் என்னும் முறைமையில் அமைய முதல் அங்கம் ஐந்து களங்களையும் இரண்டாம் அங்கம் மூன்று களங்களையும் மூன்றாம் அங்கம் நான்கு களங்களையும் நான்காம் அங்கம் ஐந்து களங்களையும் ஐந்தாம் அங்கம் மூன்று களங்களையும் கொண்டமைய உருவாக்கப்பட்டுள்ளது. மனோன்மணீயம் கவிதை நாடகம் என்பதால் தமிழின் பல பா வகைகள் இடம்பெற்றுள்ளது.அதிலும் பெரும்பான்மையாக ஆசிரியப்பாவே நாடகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மனோன்மணீயம் கவிதை நாடகத்தின் கதைக்களம் மதுரையில் தொடங்கி திருநெல்வேலி,திருவனந்தபுரம் என அமைய காவியங்களுக்குரிய மலை, நதி, அரண் முதலியவற்றின் வருணனையில் தொடங்க பாண்டிய மன்னன் ஜீவகனின் மகள் மனோன்மணியின் கனவு, ஜீவகனின் அமைச்சன் குடிலனின் துர்குணம், குடிலன் மகன் பலதேவனின் தூது, சேரமன்னன் புருடோத்தமனின் போர் ஆயத்தம், ஜீவகனின் குரு சுந்தரமுனிவரின் உலகியல் பற்றிய உரையாடல்,மனோன்மணியின் தோழி வாணியின் காதலன் நடராசனின் நண்பன் நாராயணன் சேரனுக்கு எதிரான போரில் ஜீவகனைக் காப்பாற்றுதுல், குடிலன் நாராயணன் மீது பொய்க்குற்றம் சாட்டியது, ஜீவகனின் ஏழமை நிலை, புருடோத்தமனின் காதல் நிலை,குடிலனின் சூழ்ச்சி வெளிப்படுதல், மனோன்மணி தெய்வ அருளால் புருடோத்தமனை சந்தித்து மாலை சூட்டியமை என இந்நாடகம் முகம்,பிரதிமுகம்,கருப்பம்,துய்த்தல்,வினை என்னும் ஐந்து பிரிவுகள் உடையனவாய்

அமைய இன்பியல் நாடகமாக முடிவுபெற்றுள்ளது.

**மனோன்மணீயம் நாடகத்தின் மாண்புகள்:**

மனோன்மணீயம் நாடக நூலில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழின் மொழித்தொன்மையை, மொழியின் இலக்கிய வளத்தை, பண்பாட்டுப் பெருமையை நாடகத்தின் கதைப்போக்கில் எடுத்தியம்புவது மட்டுமின்றி காப்பிய இலக்கணம் பொருந்த வாழ்வியல் நெறிகளை போற்றும் மாண்புகளை அறிய முடிகின்றது.மேலும் நாடகத்தின் பொருண்மைகளாக

-இயற்கையைப் போற்றுதல்

-அன்பின் நிலைப்பாடுகள்

-வீரநிலை

-அரசியல் ஆன்மீகம்

-வாழ்வியல் நெறிகள்

முதலானவற்றின் விழுமியங்களை பேசும் நாடகமாக உருவாக்கப்பட்டுள்ளது எனலாம்.

மனோன்மணீயம் நாடகத்தில் பெண் விடுதலைக்கு வாணியும் அறிவியல் நோக்குக்கு அழகன்,ஆனந்தன் என புகழப்பட்ட நடராசனும் மெய்ப்பொருள் விளக்கத்திற்கு குரு சுந்தரமுனிவரின் சீடர்களும் ஜீவகன், சுந்தரமுனிவர், நாராயணன் ஆகிய மூவரோடும் முரண்பட்டவனாக குடிலனும் பாத்திரங்களாய் படைக்கப்பட்டுள்ளனர். Complication and Resolution Movement என்ற ஆங்கில நாடகத்தின் உத்தி மனோன்மணீயம் நாடகத்தில் கையாளப்பட்டுள்ளது. மனோன்மணியத்தில் ஆங்கில கவிதை நூல்களில் காணப்படுவதுபோல் முன்னிலைக்கூற்று, புறக்கூற்று, தற்கூற்று அமைய உருவாக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

தமிழ் நூல்களில் மனோன்மணீயம் முன் அணியில் வைக்குத் தகுதியுடையதென்பதற்கு டாக்டர் ஜி.யு.போப் துரையவர்கள், ஆசிரியர் p.அரங்கநாத முதலியாரவர்கள், சி.வை.தாமோதரம்பிள்ளையவர்கள் முதலானவர்கள் தந்த மதிப்புரைகளே தக்க சான்றாகும். (மனோன்மணீயம்,1993, ப.xvii)

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராகவும் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் அறிவுநூற் புலவராகவும் இருந்த ராவ்பகதூர் P.சுந்தரம் பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட முதல் தழுவல் கவிதை நாடகம் தமிழின் தொல் மரபையும் முற்போக்கு சிந்தனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்த்த நவீன நாடகம் எனலாம்.

**துணைநூற்பட்டியல்:**

சரோஜினி,வை., வையாபுரிப்பிள்ளை வாழ்க்கைக் குறிப்புகள், தமிழ்ப் புத்தகாலயம்,1957

பாவேந்தர் பாரதிதாசன்,தேனருவி,மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுதித் திட்டம்.

பெருமாள்.அ.கா., மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்,NCBH, 2016

மனோன்மணியம் நவீன நாடகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,1933

மனோன்மணியம்,டாக்டர். சி. பாலசுப்பிரமணியன் பதிப்பு,நறுமலர் பதிப்பகம்,1992

வேலுச்சாமி.ந. மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, சாகித்திய அக்காதெமி, 2001